# அறிவித்தல்
## பதவி வெற்றிடம் தொடர்பானது
### மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண பொதுச் சேவைக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புதல் - 2017**

01. வடக்கு மாகாண பொதுச் சேவைக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஆணையாளர் பதவிக்கு தற்போது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2017.05.31** ஆகும்.

02. **தகைமைகள்** :-

i. இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையிலுள்ள தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்.
*(இ.உ.இ.வ.சே தரம் II இல் உள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும், இ.உ.இ.வ.சே தரம் I இற்குரிய விண்ணப்பங்கள் எதுவும் கிடைக்கப்பெறாத சந்தர்பத்தில் இ.உ.இ.வ.சே தரம் II இல் உள்ள விண்ணப்பதாரிகள் குறித்த பதவிக்கான கடமை நிறைவேற்று அடிப்படையிலான நியமனத்திற்கே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்)

ii. விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட தரத்தில் **2017.05.31** ஆந் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட செயலூக்கம் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதோடு, அக்காலத்தினுள் கிடைக்கவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்ப முடிவுத்திகதியில் 60 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03. **ஆட்சேர்ப்பு முறை** :-
அறிவித்தலில் உள்ளவாறு தகைமைகளைக் கொண்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப்பெறும் விண்ணப்பதாரி இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்.

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். (மொத்தம் 100 புள்ளிகள்)

i. தற்போதைய தரம் :- இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை தரம் I **அல்லது** தரம் II
*(அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் வழங்கப்பட்ட குறித்த பதவியுயர்வுக்கான நியமனக்கடிதத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்)

ii. கல்வித்தகைமை :- Post Graduate Degree / Diploma

iii. தற்போது வகிக்கும் பதவி :- ஆணையாளர் / சிரேஸ்ட பிரதி ஆணையாளர் / பிரதி ஆணையாளர்

iv. மொழித்தேர்ச்சி

v. விசேட அடைவுகள்

vi. நேர்முகப்பரீட்சையின் போதான செயல்திறன்

04. **விண்ணப்பிக்கும் முறை** :-

இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைவாக, A4 அளவான தாளில் இரு பக்கங்களையும் மாத்திரம் பாவித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை **2017.05.31**ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். **(விண்ணப்பத்தினை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்ளவும்)** விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **பதவியின் பெயரைக்** குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். உரிய

மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. இப்பதவிக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும்போது வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும் என்பதோடு, இந்நியமனம் தொடர்பாக இங்கு குறிப்பிடாத விதிகள் சம்பந்தமாக ஏதாவது விடயம் இருப்பின், இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநருக்குரியதாகும்.

**ரூ.வரதலிங்கம்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
04.05.2017